inspire

Innovation in Science Pursuit for Inspired Research

எதிர்கால கண்டுபிடிப்பாளர்களுக்கு

# ஊக்கமளிக்கும்

## இன்ஸ்பயர் அவார்ட்ஸ் - மானக்

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் சமுதாயத் தேவையைப் பூர்த்திசெய்ய பள்ளி மாணவர்களிடையே ஆக்கப்பூர்வமான மற்றும் புதுமையான சிந்தனைக்கான கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் திட்டம்.

**1** திட்டத்தினை குறித்த விழிப்புணர்வு மற்றும் அவசியத்தை வளர்க்க நாடு முழுவதும் ஒலி - ஒளி காட்சிகள் மற்றும் கையேடுகள் மூலமாக மாநில மற்றும் மாவட்ட அளவிலான கருத்தரங்குகள்.

**2** பள்ளிகளில் போட்டிகள் நடத்தி இரண்டு அல்லது மூன்று சிறந்த ஐடியாக்களை (எந்த இந்திய மொழியில் இருந்தாலும்) பள்ளியின் முதல்வர்/ தலைமையாசிரியர் www.inspireawards-dst.gov.in இணையத்தளம் மூலம் E-MIAS (E-Management of INSPIRE Award Scheme) போர்ட்டலில் பதிவேற்றம் செய்யலாம்.

**3** இதுவரை இணையாத புதிய பள்ளிகளும் E-MIAS போர்ட்டல் மூலமாக புதிதாக பதிவு செய்யலாம்.

**4** இந்தியாவின் வடகிழக்குப்பகுதி மாநிலங்கள் (அசாம், அருணாச்சல பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகலாந்து, சிக்கிம், திரிபுரா) மற்றும் ஜம்மு &காஷ்மீரில் உள்ள பள்ளிகள் மட்டுமே விரைவு அஞ்சல் மூலமாக "NIF - INDIA" க்கு பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பில் ஐடியாக்கள்/ கண்டுபிடுப்புக்களை அனுப்பக்கூடும்.

**5** அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் சமூகத் தேவைகளை பூர்த்தி செய்யும் திறன் கொண்ட 1,00,000 (ஒரு லட்சம்) ஐடியாக்களை NIF தேர்வு செய்யும். தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் வங்கிக் கணக்கிற்கு டைரக்ட் பெனிபிட் டிரான்ஸ்ஃபர் (DBT) மூலம் ரூ.10,000 இன்ஸ்பயர் அவார்டாக பட்டுவாடா செய்யப்ப்படும்.

**6** மாவட்ட அளவிலான கண்காட்சி மற்றும் செயல்முறை போட்டிகள் (DLEPC ) மாவட்ட மற்றும் மாநில அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்டு 10,000 சிறந்த ஐடியாக்கள்/ கண்டுபிடிப்புகள் மாநில அளவிலான கண்காட்சி மற்றும் செயல்முறை போட்டிகளுக்குத்(SLEPC) தேர்வு செய்யப்படும்.

**7** மாநில அளவில் கண்காட்சி மற்றும் செயல்முறை போட்டிகள் (SLEPC)ஏற்பாடு செய்து சிறந்த 1000 ஐடியாக்கள்/ கண்டுபிடிப்புகள் தேர்வு செய்யப்படும். இக்கட்டத்தில் NIF, நாட்டின் தலைசிறந்த கல்வி மற்றும் தொழில்நுட்பக்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து ஐடியா மாதிரியை உருவாக்க உதவி மற்றும் வழித்தடம் அமைத்து தரும்.

**8** நூதனமான/புதிய, சமூக பயன்பாட்டுத்தன்மை, சுற்றுச்சூழல் நேசம், பயனீட்டாளர்களின் உபயோகத்தன்மை மற்றும் தற்பொழுது நடைமுறையிலுள்ள அதை சார்ந்த தொழில்நுட்பங்களை காட்டிலும் மேலான நன்மைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஐடியாக்கள்/கண்டுபிடிப்புகள் தேர்ந்தெடுக்கப்படும்.

**9** தேசிய அளவிலான கண்காட்சி மற்றும் செயல்முறை போட்டியில் (NLEPC) தேர்ந்தெடுக்கப்பட்ட 1,000 ஐடியாக்கள்/ கண்டுபிடிப்புகள் காட்சிப்படுத்தப்படும். அதிலிருந்து 60 சிறந்த ஐடியாக்கள்/கண்டுபிடிப்புகள் அடுத்த கட்ட மற்றும் தேசிய விருதுகளுக்காக தேர்ந்தெடுக்கப்படும்.

**10** உற்பத்தி / செயல்முறை விரிவாக்கத்திற்காக NIF தேர்ந்தெடுக்கும் 60 முதன்மை ஐடியாக்கள்/கண்டுபிடிப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து NIF/DST- ன் ஏனைய திட்டங்களோடு சேர்த்து இக்கண்டுபிடிப்புகளும் ஃபெஸ்டிவல் ஆஃப் இன்னோவேஷன் மற்றும் எண்டர்பிரணர்சிப் (FINE) விழாவில் காட்சிப்படுத்தப்படும்.

# இன்ஸ்பயர் அவார்ட்ஸ் மானக்

அளவில்லா அறிவுப்பூர்வமான எண்ணங்களை உருவாக்குவதற்கான தேசத்தின் தேடல்


**இன்ஸ்பயர் அவார்ட்ஸ்-மானக்**

सत्यमेव जयते

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை
அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், இந்திய அரசு,
டெக்னாலஜி பவன், நியூ மெஹரோலி ரோடு, புதுதில்லி-110016
தொலைபேசி: + 91 11 26590500, 26590642
மின்னஞ்சல்: inspire.awards@nic.in
வலைதளம்: www.inspireawards-dst.gov.in

**நேஷனல் இன்னவேஷன் பவுன்டேஷன்- இந்தியா**

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் தன்னாட்சி நிறுவனம்
கிராம்பாரதி, அம்ராப்பூர், காந்திநகர்-மகுடி சாலை, காந்திநகர் -382650, குஜராத்
தொலைபேசி: + 91 2764 261131 /32/38/39 ஃபேக்ஸ்: +91 22 39167115
மின்னஞ்சல்: inspire@nifindia.org, வலைத்தளம்: www.nif.org.in
விவரங்களுக்குத் தொடர்புகொள்ள 09638418605